பெற்றோர்/பாதுகாவலர் அறிவது,

2009 பெப்பிரவரி மாதம் 25ம் திகதி நடைபெற்ற, TCDSB மேற்பார்வைக் குழுவின் ஒன்று கூடலில், கத்தோலிக்க கனிஷ்ட (ஆரம்பப்) பாடசாலைகளுக்கான **<u>பொது உடைத் தொகுதி</u>** ஒன்றின் அறிமுகம் மும்மொழியப்பட்டது. இப் பொது உடைத் தொகுதியானது, 2011 செப்டெம்பர் மாதத்திற்குள் அமுல்படுத்தப்பட வேண்டும் என, அடிப்படையில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இப் பொது உடைத் தொகுதியானது தற்போது அமுலில் உள்ள Pupil's Policy A.S 07 எனப்படும் உடைக்கொள்கையின் மறுசீரமைக்கப்பட்ட ஒரு கொள்கையாக் கொள்ளப்படுகின்றது. இப் பொது உடைத் தொகுதியானது, பொருத்தமான ஒரு உடைத் தொகுதியாகக் கருதப்படுகின்றது. இது அச்சுக்கள் இல்லாத வெள்ளை நிற மேலாடையையும், கருநீல நிறக் ( NAVY BLUE) கீழாடையையும், அன்றேல், கருநீல நிற மேலாடையையும் கீழாடையையும், உள்ளடக்கியதாக இருக்கும். **<u>டெனிம் (DENIM) துணியிலான உடைகள் அனுமதிக்கப்படமாட்டாது.</u>**

இவ்வுடைத் தொகுதியின் அறிமுகம் மூலம், பெற்றோருக்கும், மாணவர்களுக்கும், பரந்த அளவிலான இணை ஆடைத் தெரிவுகளுக்குரிய வாய்ப்புகள் உருவாகும் என்பதில் ஐயமில்லை.

மேலும், பெற்றோர் தமக்குத் தேவையான தரத்திலும், வடிவத்திலும் தமது விருப்பத்திற்கேற்ப, விற்பனையாளர்களிடம் இவ்வகையான உடைகளைக் கொள்வனவு செய்யக் கூடியதாகவும் இருக்கும். அத்துடன், இப் பொது உடைத் தொகுதியின் வகைகள், பாடசாலை சமூகத்தின் மூலமும் தெரிவு செய்யப்படலாம் என்பதும் குறிப்பிடப் பட வேண்டும். மேலும், இவ்வுடைத் தொகுதியின் மூலம் பல நன்மைகள் உண்டாகும் என்பதும், இது பாடசாலையின் பாதுகாப்பிற்கும் ஒரு காரணியாக அமையும் என்பதும், பொதுக் கருத்தாகும். அத்துடன், குறிப்பிட்ட பாடசாலையை அடையாளப்படுத்தவும், அப் பாடசாலைச் சமூகத்தின் உறவுகளை வலுப்படுத்தவும் உதவும்.

தற்போது, TCDSB இனது மூன்றில் ஒரு விகிதமான பாடசாலைகளில், பொது உடைத் தொகுதி முறை, அல்லது சீருடை முறை அமுலில் உள்ளது. சபை ரீதியில், பரந்த அளவிலான ஒரு உடைப் பாணியை அறிமுகப்படுத்துவதன் மூலம், ஏற்கனவே உள்ள சிரேஷ்ட பாடசாலைகளின் சீருடை முறைக்கு, இணையான ஒரு ஆடை ஒழுங்கினை கனிஷ்ட பாடசாலைகளிலும் அமுல்படுத்துதல், ஒரு சிறந்த சீரமைப்பு நடைமுறையாகக் கருதப்படுகின்றது.

இந்த வருடம், அதாவது 2009 செப்டெம்பர் மாதம் தொடக்கம், பல கனிஷ்ட பாடசாலைகளில், இப் பொது உடைத் தொகுதியானது அறிமுகப்படுத்தப்படவுள்ளது. ஏற்கனவே பொது உடைத் தொகுதி முறை, அல்லது சீருடை முறை அமுலில் உள்ள, 49 பாடசாலைகளில் இதனை அமுல்படுத்தத் தேவையில்லை என்பது இங்கு குறிப்பிடப் பட வேண்டும். இக்கடிதத்துடன் இணைக்கப்பட்டுள்ள குறிப்பில், பெற்றோரால் முன்வைக்கப்படும் இப் பொது உடைத் தொகுதி சம்பந்தமான பொதுவான வினாக்களும், அதற்கான விடைகளும் உள்ளடக்கப்பட்டள்ளது.

மேலும், இதனை எமது பாடசாலையில் அமுலுக்குக் கொண்டு வருவதற்கு ஏற்ற வழிவகைகளை ஆராய்வதற்கும், அதற்கான ஆயத்தங்களைச் செய்வதற்கும், உங்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படும். எமது பாடசாலையின் ஆலோசனைக் குழுவின் (CSAC) அடுத்த ஒன்று கூடலில் இதற்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்படும்.

இவ்வொன்றுகூடல், ……………………..........................................…………………….
நடைபெறவுள்ளது. இதில் நீங்களும் பங்கு கொண்டு, உங்களது அபிப்பிராயங்களையும், எண்ணங்களையும் பகிர்ந்து கொள்ள முடியும். உங்களது பங்களிப்பு மிகவும் அத்தியாவசியம் என்பதனை இங்கு தெரியப்படுத்த விரும்புகின்றோம். மேலும், இப்புதிய நடைமுறை எமது பாடசாலை சமூகத்திற்கு ஒரு பெரும் சவால் என்பதையும் நாம் அறிவோம். இச் சவாலை நாம் யாவரும் மனப்பூர்வமாக ஏற்றும், பெற்றோரின் விருப்பு வெறுப்புக்களுக்கு செவிசாய்த்தும், அதற்குத் தகுந்த வழிமுறைகளை ஏற்படுத்திக் கொடுத்தும், சமாதானமாகவும் ஒரு மனதுடனும் ஒன்றாக செயற்படுவோமாக!

இப்பொது உடைத் தொகுதி முறை தொடர்பான மேலதிக விபரங்கள் உங்களுக்கு உரிய நேரத்தில் அறியத்தரப்படும்.

உங்களது ஆதரவுக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன்.

இங்ஙனம்,

…………………...
அதிபர்